<u>சுருக்கம்</u>

சமூக நலம்–ஊனமுற்றோர் நலம்–மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அமைத்தல் மற்றும் ரூ.1.5810 கோடி ஒப்பளிப்பு –ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.4) துறை**

**அரசாணை (நிலை) எண்.223** **நாள் 26–11–2007**

**படிக்கவும்.**

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.5257/ஊம.2–1/2007, நாள் 26.9.2007

–– –– ––

<u>**ஆணை:**</u>

''மனவளர்ச்சி குன்றியோரைப் பராமரிக்கத் தனிக் கவனம் தேவையென்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான உறைவிடத்துடன் கூடிய சிறப்புக் கல்வி (Special Education) மற்றும் தொழிற்பயிற்சி வசதிகள் அனைத்து மாவட்டங்களிலும் அளிக்கப்பெற இந்த அரசு ஆவன செய்வதுடன், அவர்களைப் பராமரித்திட ஆர்வமுடன் முன்வரும் தகுதியுடைய தொண்டு நிறுவனங்களுக்கு ஊனமுற்றோர் நல வாரியம் மூலமாக தேவையான நிதியுதவியும் வழங்கப்படும்'' என்று 2007–2008–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அனைத்து மாவட்டங்களிலும் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை தடுப்பு மையங்கள் அமைக்க கருத்துருவினை அனுப்பியுள்ளார். மனவளர்ச்சிக் குறைவுடன் பிறக்கும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்களை தங்களது சுய தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ளக் கூடிய நிலைக்கு கொண்டு வருவதற்கு அவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு பயிற்சி வழங்குவது அவசியமாகிறது என்றும், 1991 கணக்கெடுப்பின்படி, 0–14 வயதுள்ள குழந்தைகளில் 3% குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியவர்களாக இருப்பது தெரிய வந்துள்ளது என்றும், ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் மற்றும் மறுவாழ்வு திட்டங்களின் பயன்கள் ஆகியவை நகர்ப்புறங்களில் வசிக்கும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை சுலபமாக சென்றடைகிறது என்றும், மனவளர்ச்சிக் குன்றியவர்களில் பெரும்பாலானோர் கிராமப்புறங்களில் வசிப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்றும், எனவே,

அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை ஆரம்பிப்பது அவசியமாகிறது என்றும் தெரிவித்து, ஒரு ஆரம்ப நிலை பயிற்சி மையம் அமைக்க ரூ.5,42,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) வீதம் 30 மையங்கள் அமைக்க ரூ.1,62,60,000/–(ரூபாய் ஒரு கோடியே அறுபத்தி இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) செலவினம் அனுமதிக்கும்படி ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் கோரியுள்ளார்.

2. ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்தபின்னர் அனைத்து மாவட்டங்களிலும் மனவளர்ச்சி குன்றியோருக்கான 30 ஆரம்ப நிலை பயற்சி மையங்களை அமைக்க இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு மையத்துக்கு தொடர் செலவினமாக ரூ.2,82,000/– தொடராச் செலவினமாக ரூ.2,45,000/– ஆக ஒரு மையத்துக்கு மொத்தம் ரூ.5,27,000/–வீதம் 30 மையங்களுக்கு ரூ.158.1 இலட்சம்– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளித்து இச்செலவினத்தை மேற்கொள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையருக்கு அரசு அனுமதியளிக்கிறது. மேலும்,

(அ) ஊனமுற்றோருக்கான சட்டம், 1995 பகுதி–52ன் கீழ், 30 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைக்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் உறுப்பினர்–செயலருக்கு அனுமதியளித்தும்,

(ஆ) தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்யவோ அல்லது நீக்கம் செய்யவோ ஊனமுற்றோர் நல வாரியத்தின் மூலம் செய்ய அனுமதி அளித்தும்,

(இ) ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்/உறுப்பினர்–செயலர் அவர்களால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்குழு இம்மையங்களை கண்காணிக்க அனுமதி அளித்தும்,

(ஈ) ஊனமுற்றோர் நல வாரியத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு இத்தொகையினை பெற்று வழங்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்/உறுப்பினர்–செயலர் அவர்களுக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

2235–சமூகப் பாதுகாப்பும் மற்றும் நலனும்–02–சமூக நலன்–101–ஊனமுற்றோர் நலன்–II-மாநிலத்திட்டம்–பதினொன்றாவது ஐந்து ஆண்டு திட்டப் பணிகள்–M.G.–மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ் வாய்ந்த அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி 09–உதவி மான்யங்கள்–01–நடப்புச் செலவினங்களுக்கான மான்யங்கள்.
(டி.பி.கோடு எண்.2235–02–101–M.G.–0914)

4. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.எண்.398/J.S.(BK)/2007, நாள் 22–11–2007.

//ஆளுநரின் ஆணைப்படி//

நா.ச.பழனியப்பன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை–6
அனைத்து மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்,
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் வழியாக)
தலைமைக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–35.

நகல்.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித் (சந) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு</u>

ஒவ்வொரு மாவட்டத்திலும் 2007–2008–ம் ஆண்டு மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அமைக்க ஏற்படும் செலவின விவரம்:

<u>தொடர் செலவினம் ( 6 மாதங்களுக்கு)</u>

| வ. எண் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 5 சிறப்பு பயிற்றுநர் ஊதியம்<br>(ரூ.5000/–x 5 எண்ணிக்கை x 6 மாதங்கள்) | 1,50,000 |
| 2 | 4 ஆயாக்கள் ஊதியம்<br>(ரூ.1000/–x 4 எண்ணிக்கை x 6 மாதங்கள்) | 24,000 |
| 3 | சில்லரை செலவினம்<br>(ரூ.1000/–x 6 மாதங்கள்) | 6,000 |
| 4 | சிற்றுண்டி<br>(ரூ.10/–x 50 நபர் x 25 நபர்கள் x 6 மாதங்கள்) | 75,000 |
| 5 | வாடகை<br>(ரூ.2000/–x 6 மாதங்கள்) | 12,000 |
| 6 | ஆலோசகர் பயணப்படி<br>(ரூ.2500/–x 3 நபர்கள் x 2 பயணத்திற்கு) | 15,000 |
| | மொத்தம் | 2,82,000 |

<u>**தொடராச் செலவினம்:**</u>

| | | | | |
|---|---|---|---|---|
| மரச்சாமான்கள் | | : | | ரூ. 30,000 |
| கல்வி உபகரணங்கள் | | : | | |
| 1 | ஒருங்கிணைந்த புலன் பயிற்சி மையம் (பயிற்றுவிப்பதற்கான உபகரணங்கள் மற்றும் குழந்தைகளுக்கு காயம் ஏற்படா வண்ணம் தடுப்பதற்காக தரை மற்றும் கவர்களில் குஷன் பேடிங் செய்வதற்கான உத்தேச செலவினம்) (Sensory Integration Therapy Unit) | : | ரூ. 1,00,000 | |
| 2 | டெலப்மெண்டல் தெரபி யூனிட் அமைப்பதற்கான உத்தேச செலவினம் (Developmental Theraphy Unit) | : | 50,000 | |
| 3 | பயிற்சி மையம் அமைப்பதற்கான செலவினம் (Theraphy Unit) | : | 30,000 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ADL/சுய உதவி பயிற்சி மையம்<br>(Self Help Training Unit) | : | 20,000 | 2,00,000 |
| | விழிப்புணர்வு/<br>ஊனத்தை கண்டறிதல். | : | | 15,000 |
| | மொத்தம் | : | | 2,45,000 |
| | மொத்த செலவினம் | : | | 5,27,000 |

மொத்தம் ரூ.2,82,000 + ரூ.2,45,000 = ரூ.5,27,000 (ஒரு மையத்திற்கு)
30 மையங்களுக்கு ரூ.5,27,000 x 30 = ரூ.158.1 இலட்சம்
(ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்)

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்